# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 11.04.2022. | PW1 |
|---|---|---|
| Name: செல்லம் பஞ்சநாதம் | W/o. பஞ்சநாதம் | |
| Evidence Recorded Time: 03.51 P.M. to 04.45 P.M | | |

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் காடு பாதி வாங்கிவிட்டார்கள் எங்கள் நிலத்திற்கு செல்ல தடம் இல்லாததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு படிக்க தெரியும். 1 ஏக்கர் 57 செண்ட் நிலத்திற்கு வழக்கிட்டுள்ளேன். அதன் சர்வே எண் நினைவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்த சொத்து எனது தகப்பானரும், தயாரும் எனக்கு கொடுத்தன் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். பத்திரத்தின் வாயிலாக எனக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்தார்கள். எனக்கு கொடுத்த நிலத்திற்கு ஏதாவது தடம் ஒதுக்கி அதற்கு அளவுகள் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். நான் தங்கம்மாள் மற்றும் அவரது மகன்கள் பெயரிலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு யார் பெயரிலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. அலமேலு என்பவர் என் சகோதரி ஆவார். அலமேலுவிடமிருந்துதான் தங்கம்மாள் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை கிரையம் மூலம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதே சர்வே எண்ணில் 14.06.1973–ல் அதே சர்வே எண்ணில் 21 1/2 செண்ட் நிலத்திற்கு சம்மதப்பத்திரம் தங்கம்மாள் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு எழுதிக்கொடுத்த 21 1/2 செண்ட் நிலத்தையும் கிரையம் மூலம் பெற்ற 1 ஏக்கர்ல 57 1/2 செண்ட் நிலத்தையும் தங்கம்மாள் அனுபவித்து வந்து பின்னர் அவருடைய மகன் இந்திரஜித்திற்கு வாய்மொழியாக பாத்தியப்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில்தான் ஊரக நிலமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 1984–ல் பட்டா வழுங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. அதற்கு பின்னிட்டு இந்திரஜித்தும் அவரது சகோதரரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்டார்கள் என்றால் சரிதான். நான் வழக்க நடத்தி வரும் சொத்தானது இந்திரஜித்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் அந்த 21 செண்ட் நிலத்தை இந்திரஜித்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். இந்திரஜித் நிலத்திற்கு கீழ்புறம் ஒரு தார்ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த தார் ரோட்டிற்கு சர்வே எண்.158/1சி என்றால் சரியல்ல. அதன் பட்டா இன்று வரை இந்திரஜித் மற்றம் அவரது சகோதரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. தார்ரோட்டிற்கு மேற்கு புறம் உள்ள இந்திரஜித்தின் தென்னந்தோப்பு என்றால் சரிதான். அதற்கு தான் இந்திரஜித் ஒரு பெரிய மெயின் கேட்டும், ஒரு சிறிய கேட்டும் வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு கம்பிவேலி போட்டு சுமாராக

10 வருடங்கள் இருக்கும் என்றால் 5 வருடங்கள் ஆகிறது. இந்திரஜித் கம்பிவேலி போட்டு இரண்டு கேட்டுக்களையும் போட்டு ஐந்தாண்டுகளாக அனுபவித்து வருவது எனக்கு தெரியும் என்றால் தெரியும். அப்பு முதலியார் எனக்கு பெரியப்பா ஆகும். இந்திரஜித்தின் தென்னந்தோப்பு வடக்கு மூலையில்தான் அப்பு முதலிசயார் சமாதி உள்ளது என்றால் சரிதான். அந்த சமாதி பக்கத்தில் மூன்று பெரிய தென்னை மரங்களும் ஐந்து பனை மரங்களும் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மீதி தென்னை மரங்கள் இந்திரஜித் நிலத்தில் தென்மேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். இந்திரஜித் தென்னந்தோப்பு நிலத்தில் மின் டவர் லைன் செல்கிறது என்றால் நான் எனது தோட்டத்திற்கு சென்று ரொம்ப நாட்கள் ஆகிறது. எனது பெற்றோர் எனக்கு நிலத்தை எழுதிக்கொடுக்கும்போது டவர் லைன் இருந்ததா என்றால் நினைவில்லை. அவ்வாறு டவர் லைன் இருப்பதால் இந்த பிரதிவாதி நிலத்தின் இடத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. டவர் லைன் அந்த நிலத்தில் போட்டு ஐம்பது வருடங்கள் இருக்கும் என்றால் நினைவில்லை. அலமேலு தங்கம்மாளுக்கு நிலம் விற்றதிலுந்து அந்த நிலத்தில்தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அலமேலு தங்கம்மாளுக்கு நிலத்தினை விற்கும்போது நான் தடபாத்தியம் கேட்டேனா என்றால் அவர் நிலத்தினை விற்கும்போது எங்களுக்கு தெரியமலேயே விற்றுவிட்டார். அலமேலு அம்மாள் நிலத்தை விற்றது எப்போது தெரியும் என்றால் நிலத்தை விற்ற மூன்று ஆண்டுகளுக்குள் தெரியவந்தது. அவ்வாறு தெரியவந்தபிறகு எனது நிலத்திற்கு தடம் வேண்டும் என்பதற்காக ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்தேனா என்றால் பஞ்சாயத்தார் மூலம் கேட்டேன். மேற்சொன்ன சங்கதியை எனது வழக்கில் கூறியுள்ளேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பவர் எனது மகன் சந்திரன் ஆவார். அவர் வனவாசி பஞ்சாயத்து போர்டின் முன்னாள் தலைவர் என்றால் சரிதான். வழக்கு போட்டுள்ள சொத்தில் பி.வி.சி பைப் கம்பெனி வைக்கஉள்ளோம். அதற்காகத்தான் எங்கள் நிலத்தில் தொட்டிகளை அமைத்துள்ளோம் என்றால் சரிதான். அதனால் சின்ன கேட்டை எடுத்துவிட்டு ஒரே பெரிய கேட்டாக போட்டுவிடலாம் என்று கேட்டோம் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை வேறு மாற்றுவழி சொன்னார் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டு பிரதிவாதி நிலத்தில் பிரதிவாதியின் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ததால் பிரதிவாதி மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அலமேலுவை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 1968–ம் ஆண்டு பாகக்கறார் பத்திரத்திலும் சக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயார்

ராமாயம்மாள் இளைய மனைவி என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு முதல் மனைவியும் அவருக்கு வாரிசுகளும் வா.சா.ஆ.2 ஆவணம் எழுதும்போது உயிருடன் இருந்தார்கள். அதிலும் செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தங்கம்மாள் வாங்கிய கிரைய பத்திரமான வா.சா.ஆ.4 ஆவணத்தில் சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் கிழபுறம் விற்பனையான என்ற விவரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்திலும் இந்த வழக்கு சொத்திற்கு சக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. வழக்கு சொத்து, புலஎண்.158/1 மொத்த நிலம் 3 ஏக்கர் 15 செண்ட் நிலத்தில் டவர் லைன் அதிகமாக சென்றதாலும் விவசாயம் பாதிகப்பட்டதாலும் அலுமேலம்மாவிற்கு கூடுதலாக என் தாயார் 21 செண்ட் விட்டிருந்தார் என்றாலும் அந்த நிலத்தை கிரைய பத்திரம் மூலமாக சம்மதபத்திரம் மூலமாகவும் அலமேலம்மாள் தங்கம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. 1973–ம் ஆண்டு கிரையம் பெற்றது முதல் தற்போது வரை 1 முதல் 3 பிரதிவாதிகள் தொடர்ந்து அனுபவித்து வந்து தற்போது இந்திரஜித் அனுபவித்து வரும் சங்கதி எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் தெரியும் என்றாலும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காமல் தற்போது காலம் கடந்து பொய்யான சங்கதிகளை கூறி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் காலவரம்பு சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்கின்ற அரசாணைப்படி பட்டா மாற்றி கொடுக்கவேண்டும் என்று கூறியுள்ளேன் அந்த அரசாணை பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்த வழக்கு, கேட்டுள்ள பரிகாரம், செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. அதனால் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று நினைவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் நினைவில்லை. தாவா சொத்து அளவு குறைவாக உள்ளது சம்மந்தமாக நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் அளவு குறைவாக இருக்கின்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கொஞ்சநாள் முன்னர்தான் தெரியவந்தது. எனக்கு அளவு குறைந்த விவரம் முன்பே தெரியும் என்றாலும் தற்போது அதனை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யுடீஆர் திட்டத்தின் கீழ் நிலத்தின் அளவு குறைவாக இருந்தால் அதற்கான மேல்முறையீடு வருவாய்துறை அதிகாரிகளிடம்தான் முறையிடவேண்டும் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் சரியாக ஆவணங்களை

பரிசீலனை செய்து பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கஇயலாது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.